என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான முனைப்பான திட்டங்களை இந்த அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 104- திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

104—

வழவனார் வடிகாலின் கரைகளைக் கட்டுதல்.

* 1538 திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகா, வழவனார் வடிகாலின் இரு கரைகளையும் கட்ட அரசு திட்டமிட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இத்திட்டத்தை எடுத்துக்கொள்ளுவதற்கான சாத்தியக் கூறுகள் தற்பொழுது இல்லை.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டியிலே இருக்கக்கூடிய வழவனார் என்ற வடிகால் மூன்று தாலுக்காக்களை இணைத்து, வெள்ளக் காலங்களிலே வழவனாரில் தான் அது மிகவும் வடிகிறது. அதன் இரு கரைகளும் பல ஆண்டுகாலமாக பாதுகாக்கப்படாத நிலையில் இன்றைய தினத்தில் 100 ஏக்கருக்கு மேல் அதன் மூலமாக வீணடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆக அந்த வடிகால் மூலமாக பாதிக்கக்கூடிய விளை நிலங்களை பாதுகாப்பதற்கு அதன் இரு கரைகளையும் அரசு கட்டுவதற்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

1991 செப்டம்பர் 28]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே திருத்துறைப் பூண்டி தாலுக்காவிலே உள்ள வழவனார் வடிகாலில் இரு கரை களையும் சீரமைக்கின்ற அந்தத் திட்டம் தற்போது இல்லை யென்று நான் சொன்னாலும்கூட, 1992-93 ஆம் ஆண்டினுடைய பகுதி 2 'பார்ட் 2' ஸ்கீம் என்ற திட்டத்திலே அதற்காக ஒரு நடைமுறை மதிப்பீடு வைத்திருக்கின்றோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கைக்கேற்ப 1992-93 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழே அதை எடுத்துச் செய்வதற்கு அரசு முயற்சியினை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடிகாலோடு மட்டுமல்ல. தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் கடலில் அதிகமான காற்று வருகின்றபோது, கடலின் தண்ணீர், உப்புத் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகின்ற போது, அந்த வழவனாரில் வந்து நூற்றுக்கணக்கான ஏக்கரின் உள்ளே நுழைந்து, அதனால் பயிரிடப்பட்டிருக்கின்ற பயிர்கள் எல்லாம் கருகிவிடுகிறது. உப்புத் தண்ணீர் நிலத்திலே புகுவ தாலே 10 ஆண்டுக் காலமாக எந்த விவசாயமும் செய்ய முடியாமல் இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குண்டான நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். மகிழ்ச்சி. அவர்கள் அந்தத் திட்டத்தை விரைவிலே நிறை வேற்றித் தர வேண்டுமாய் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித் ததைப் போல் அந்த வழவனார் வடிகாலின் இரு கரைகளையும் சீரமைக்கின்ற நேரத்திலே அதையொட்டி, ஒற்றைக்கரை, அட விளஞ்சான், இரட்டைக் கரை, அரிச்சந்திரா நதி போன்ற பகுதி களில் இருக்கின்ற கால்வாய்களை எல்லாம் சீரமைக்க இருக் கின்றோம். ஏனென்றால் கடலின் தண்ணீர் அந்தப் பகுதியிலே வருகின்ற நேரத்திலே எல்லா கால்வாய்களையும் சீரமைத்தால் தான் தண்ணீரை முறைப்படுத்திச் செல்லமுடியும், கடல் நீர் அங்கே வராமல் தடுக்கமுடியும் என்ற காரணத்தினாலே அந்த இணைந்த கருத்துருவிலே சேர்த்து இந்தக் கால்வாய்களையும் செப்பனிட இருக்கின்றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே உறுப்பினர் அதைப்பற்றி அச்சப்படத் தேவையில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கரையை வலுப்படுத்துவதில் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த ஆற்றங்கரைகளை வலுப்படுத்துவது என்று அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி ஆற்றினுடைய கரைகளிலே இருக்கின்ற அனைத்துக் கரைகளையும் நவீனப்படுத்துகின்ற ஒரு திட்டத்தை இந்த அரசு வைத்திருக்கின்றது. அதற்காக மத்திய அரசினுடைய உதவியையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் கோரி இருக்கிறார்கள். ஆகவே பொதுவாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் காவிரிப் பகுதியில் இருக்கின்ற அனைத்துக் கால்வாய்களையும் சீரமைக்கின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் தற்போது உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா என். 105—திரு. இரா. நடேசன், டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மற்றும் திரு. கு. லாரன்ஸ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

105—

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைத்தல்.

*35 **திரு. இரா. நடேசன்:**

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை:

திரு. கு. லாரன்ஸ்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு வேளாண்மைக் கல்லூரி ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS